# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S.No.77/2022

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | முத்து கிருஷ்ணன் |
| Father's Name | : | பண்டாரம்பிள்ளை |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.11.2025.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 13.09.1972 தேதியில் வீரபுத்திரம் குமாரர் குத்தாலநாதபிள்ளை மற்றும் மகாராஜபிள்ளை மனைவி கிருஷ்ணம்மாள் ஆகியோர்கள் பண்டாரம் பிள்ளை என்பவருக்கு எழுதிக்கொடுத்த குத்தகை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 07.10.1977 தேதியில் வீரபுத்திரன் குமாரர் குத்தாலநாதபிள்ளை மற்றும் மகாராஜபிள்ளை மனைவி கிருஷ்ணம்மாள் ஆகியோர்கள் பண்டாரம்பிள்ளை என்பவருக்கு எழுதிக்கொடுத்த குத்தகை ஒப்பந்தம்

அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.1,2 ஆவணங்கள் இந்த வழக்கு வாதியால் குறியீடு செய்ய இயலாது என பிரதிவாதி தரப்பில்ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனை வழக்கு இறுதிவிசாரணையின்போது பரிசீலனை செய்யப்படும்

3. 1ம் பிரதிவாதி பெயரில் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டதை காட்டக்கூடிய டவுண் சர்வே லேண்ட் ரிஜிஸ்டர் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/—K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.